REGD. No. M. 6311

PHONE No. 5563

தனி இதழ்
ஒரு அணு
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 155

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர்: அண்ணாதுரை

"THE NAM NADU" A TAMIL DAILY: THE OFFICIAL ORGAN OF: THE D.P.F.

சந்தா விபரம்

உள்நாடு (இலங்கை உட்பட)	
ஆண்டு	ரு. 24—0—0
6 மாதம்	ரு. 12—0—0
3 மாதம்	ரு. 6—0—0
வெளிநாடு:	
ஆண்டு	ரு. 30—0—0
6 மாதம்	ரு. 15—0—0
3 மாதம்	ரு. 7—8—0

சென்னை: கார்த்திகை மீ 26உ வெள்ளி (11—12—53) ★ ★ ★ வெளியூர்: கார்த்திகை மீ 27உ சனி (12—12—53)

நேரு, பாதுஷா போல் பேசுகிறார்!

—(0)—

சி. ஆர். நம்மை தனது 'முதல் எதிரி'யென்கிறார்!

நாம், அவரை என்றும் நண்பர் என்று சொன்னதில்லை!

—[0]—

ஆச்சாரியாரின் 'மிருதுவான அடக்குமுறை'க்கு கல்லக்குடியும்—தூத்துக்குடியுமே சாட்சி!

தி.மு.க. துணைச் செயலாளரும், மாணவர் தலைவருமாகிய

கே. ஏ. மதியழகன் அறைகூவல்

சென்னை, டிச 10—

"ஆச்சாரியார், நம்மை 'முதல் எதிரி' என்கிறார்; அவரை, நாம் எப்போதும் நம்முடைய நண்பர் என்று எண்ணியதில்லை. வடநாட்டு வல்லூறுகளும், பாசிஸப் பாம்புகளும், இங்கே சுரண்டல் நடத்த அனுமதிக்கும் ஆச்சாரியார், நமக்கு நண்பராகவா இருக்க முடியும்?

"காஷ்மீர் பண்டிதர் குறிப்பிட்டாராம்—நம்மை, 'காட்டுமிராண்டிகள்' என்று! நாம் காட்டுமிராண்டிகளோ, அல்லவோ; ஆனால், தென்னாட்டை, திராவிடத்தை, இத்தாயகத்தை, நேருவின் கொடுங்கோன்மை, 'காட்டுமிராண்டி நாடாக' ஆக்கிவிட்டது என்பதை அவர் உணரவேண்டும்."

"தாமோதர் அணைக்கட்டும், சித்தரஞ்சன் தொழிற்சாலையும், சிந்திரி ரசாயன நிலையமும், ஆயிரக்கணக்கான ஆலைகளும், வடநாட்டிலே—அமெரிக்காவின் பக்கத்து வீடுபோல வளம் கொழிக்கிறது. வடநாடு! இங்கே—தென்னாட்டில, குடிசைத் தொழில் குலைந்து, கஞ்சிக்கும் வழியின்றி, தாசானுதாசர்களாய், தரித்திரர்களாய் வாழ நேர்ந்துவிட்டது."

"ஆச்சாரியாரின் கல்வித் திட்டம் பற்றி, பருலேகர் கமிட்டி—அக்க நிபுணர்கள, ஆச்சாரியாருக்கு வக்காலத்து வாங்கும் வக்கீலாக மாறினார்களே தவிர, வேறென்ன?"

"5000 பேர் சிறையிலே—அண்ணா சிறையிலே—கல்வித் திட்ட எதிர்ப்பாளர்கள் உள்ளே இருக்கும்போது, பாருலேகர் குழு தடைபற்றி யாரிடத்திலே விசாரித்தது? தி. மு. கழகத்தைக் கேட்டதா? எப்படி அக்குழு முடிவு கூற இயலும்?"

"நேரு சொன்னாராம்—'இவர்கள் விஷயத்தில், ஆச்சாரியார், மிருதுவாக நடந்துகொண்டிருக்கிறார்' என்று—தூத்துக்குடியிலும் கல்லக்குடியிலும் பலரைச் சுட்டு, ஆயிரமாயிரம் காளைகளைச் சிறையிலே அடைத்து, சதி வழக்கு தொடுத்து, பசுலுல்லா ரோடிலே—ஆச்சாரியாரின் வீட்டருகே தடியடியும், கண்ணீர்ப் புகையும் நடத்தி சவுண்டப்பர்களின் எலும்புகளை முறியவைத்து, என்னற்ற தோழர்களின், கை, கால்களை ஊனமாக்கிவிட்டு, ஆயிரமாயிரம் தோழர்களைப் பல இன்னல்களுக்கு ஆளாக்கினார், ஆச்சாரியார், அடக்குமுறை வெறிபல—'அங்கே' இருந்து வந்த நேரு, 'இங்கே' கூறுகிறார்—'ஆச்சாரியார், நம் விஷயத்தில், மிக மிருதுவாக நடக்கிறார்' என்று!"

"பண்டிதர் நேரு, பிரதமர் என்ற முறையிலே பேசவில்லை—அன்றைய முகலாய பாதுஷாக்கள் போக்கிலே பேசுகிறார் இவ்வளவு பெரிய ஒரு ஜனநாயக இயக்கத்தை, மதிக்கவோ, மரியாதை கொடுக்கவோ தெரியாமல்!"

(3-ம் பக்கம் பார்க்க)

தோழர்கட்கு!

தோழர் மதியழகன் வரவேற்புக் கூட்டத்தில் சொற்பொழிவாற்றிய தோழர்கள் அண்ணாதுரை, நெடுஞ்செழியன் ஆகியோரின் சொற்பொழிவுகள் தொடர்ந்து வெளிவரும்.

'திராவிடத்தை ஆரிய இருள் - - கப்பிக்கொண்டு இருக்கிறது'

'எங்களால் இந்நாட்டை ஆள முடியாதா?'

கராச்சி, டிச 9—

பாகிஸ்தானில் கராச்சிக்கு 18 மைல்களுக்கு அப்பால் ரூ 2 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள முதல் இரும்பு எஃகு உற்பத்தி தொழிற்சாலை இம்மாதம் ஆரம்பமாகும். சாதாரண இரும்புத் தகடுகள், உருண்டைகள், கம்பிகள் ஆகியவைகளை உற்பத்தி செய்யும் மணிக்கு 7 டன் உற்பத்தி செய்யும் இத்தொழிற்சாலையில் 600 தொழிலாளர்கள் நியமிக்கப்படுவர்.

'வடநாட்டு ஆதிக்கத்தினடியாகவே ஆச்சாரியார் அதிகாரத்திலிருக்கிறார்!'

'ஆட்சியில்தான் கோளாறென்பதை கண்ணியமுள்ள காங்கிரசார் உணர வேண்டும்'

பாராட்டுக் கூட்டத்தில் தோழர்கள் ஏ. கோவிந்தசாமி, அன்பழகன், நடராசன், கோவிந்தராசன் பேச்சு

சென்னை, டிச. 11—

சிறை மீண்ட திராவிட முன்னேற்றக் கழகத் துணைச் செயலாளர் தோழர் கே. ஏ. மதியழகன் அவர்களை வரவேற்று, ஒரு மாபெரும் பொதுக் கூட்டம் நேற்று மாலை, (ஜார்ஜ் டவுன் தி. வி. க. திடலில் (காளையானமைத் தகர் மைதானம்) நடைபெற்றது.

தோழர் ஜே. எம். மணி முன்மொழிய, தோழர் ஆ. ச. சந்திரமூர்த்தி வழிமொழிய தோழர் ... வெறிபீரன தலைமை வகித்தார்.

தோழர் வி. எம். கோவிந்தராசன் தி. மு. கழகத் தொண்டர்கள் பற்றியும், தோழர் மதியழகனை வரவேற்றும் பேசினார்.

பின்னர், சென்னை மாவட்ட தி. மு. கழகச் சார்பிலும், கிளைக் கழகங்கள் அனைத்தின் சார்பிலும், படிப்பகங்கள், மன்றங்கள், தொழிலாளர் சங்கங்கள், நூல் நிலையங்கள் பலவற்றின் சார்பிலும் தோழர் மதியழகனுக்கு மலர் மாலைகளும், வாழ்த்துப்பாக்களும், கைத்தறி ஆடைகளும் அளிக்கப்பட்டன.

★

க. அன்பழகன்

இறுதியாக, தோழர் க. அன்பழகன் அவர்கள் பேசியதாவது:

"திராவிட நாட்டில் ஆரிய இருள் கவ்விக் கொண்டு, வடவர் ஆட்சி என்ற தனி முடிக்கொண்டிருக்க—அதை விரட்டும் அரும் பணியில் ஈடுபட்டு, அரும்தொண்டு புரியும் நண்பர் மதியழகன் அவர்களைப் பாராட்டுகிறேன்; வாழ்த்துகிறேன்; வருக! வருக! என வரவேற்கிறேன்," என்று குறிப்பிட்டார்.

★

ஏ. கோவிந்தசாமி

தோழர் கோவிந்தசாமி எம். எல். ஏ., அவர்கள் பேசுகையில்:

"தோழர் மதியழகன் அவர்களை வரவேற்கும் இம்மாபெரும் விழாவினைப் பார்க்கும்போது எனக்கு ஒன்று நினைவிற்கு வருகிறது. நேரு பண்டிதர், 'காட்டுமிராண்டிகள்' என்று யாரைப் பார்த்து? சென்னையில் அவரை வரவேற்கக் கூடியிருந்தவர்களைப் பார்த்து! இதை ஊரறிந்து ஒழித்து, தோழர் மதியழகன் போன்றவர்கள் மந்திரியாக வந்தால், என் இந்நாட்டை ஆள முடியாது?" என்கேட்டு அவர் விளக்கமாக கூறினார்.

★

என். வி. நடராசன்

தோழர் என். வி. நடராசன்

(3-ம் பக்கம் பார்க்கவும்)

"மக்கள் கல்லாலடிப்பார்கள் என்று காங்கிரசாருக்கு அச்சமிருக்கிறது!"

—(:)—

"சமூகத்தின் 'உயர்ந்த ஜாதி' என்று இறுமாப்புக் கொண்டிருக்கின்றனர்!"

"பதவி மோகமும், அதிகார ஆசையும் காங்கிரசாரைப் பிடித்துக்கொண்டன"

மொழிவழி மாநில கோரிக்கையினர்மீது பட்டீல் பாய்ச்சல்!

கோதாரா, டிச 9—

பம்பாய் மாநில காங்கிரஸ் குழுத்தலைவர் பட்டீல் அவர்கள், மொழிவழி மாநிலக் கோரிக்கையினர் மீது பாய்ந்தும், மாநிலங்களில் பல மொழியினராக இருந்தும் கடந்த இரு நூற்றாண்டுகளாக பிரிட்டிஷ் ஆட்சியில் கட்டுப்பட்டே கிடந்தவர்கள். மேலும் சில ஆண்டு அப்படியே இருப்பதற்கு என்ன என்று வினவியும் காங்கிரஸ் கட்சியினரின் தற்கால போக்குபற்றி விளக்கியும் பேசி இருக்கிறார்.

மனச்சாந்தி!

"எல்லைக் கமிஷனை சர்க்கார் ஏற்படுத்திவிட்டதன்மூலம், மொழிவாரி மாநிலப் பிரிவினைக்கு சர்க்கார் இணங்கிவிட்டதென்று கருத முடியாது. இக் கமிஷன், மொழிவாரிப் பிரிவினையே வேண்டாம் என்றுகூட சிபார்சு செய்யலாம்."

—எஸ். கே. பட்டீல்.

தேசிய ஒற்றுமை அரங்கு, மொழிவழி மாநில ஏற்பாட்டை முழுமூச்சாக எதிர்த்து நிற்கும். இதைச் சூழ்நிலையில் மொழி அடிப்படையில் மாநில பிரிவினை செய்வது விரும்பத

(3-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர்..அண்ணாதுரை

சென்னை 11—12—1953 வெள்ளி

இருட்டு அறை!

'இருட்டு அறை, கருட்டுப் பாம்பு, குருட்டுப் பெண்' என்ற உவமையைப் பொருந்தாத விவகாரங்களுக்குக் கூறுவது வழக்கம். அதைப்போன்றேதான் இருக்கிறது ஆச்சாரியாரின் பதவி நீடிப்பு விவகாரமும்.

காங்கிரஸ் பாராளுமன்றக் குழு செய்த முடிவில் ஆச்சாரியாருக்கு எதிர்ப்பாக இருந்த—இருக்கும் காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர்கள் ஆச்சாரியாருடன் ஒத்துழைக்க வேண்டும் என்றும், அப்படிப்பட்ட ஒத்துழைப்புக்கு தமிழ்நாடு காங்கிரஸ் குழுத் தலைவர் காமராஜர் ஒப்புக்கொண்டார் என்றும், எப்படியும் ஆச்சாரியார்தான் மேலும் பதவியில் நீடித்து இருக்கவேண்டும் என்றும், ஆச்சாரியார் மீது நம்பிக்கை இல்லை என்று கூறுவது கண்டிக்கத் தக்கது என்றும், விளக்கமாக இருக்கின்றன.

இந்த முடிவில் கூறப்பட்டுள்ள ஆச்சாரியார் பதவி நீடிப்பும், ஆச்சாரியாருக்கு எதிர்ப்பு காட்டுவது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது என்பதும், கடைமுறைக்கு வந்துவிட்டன என்பதை, ஆச்சாரியாரின் ஆணவமான பேச்சும், அவர் இனத்துத் தாள்களின் ஆதரவுப் பேச்சும் விளக்கமாக்கிவிட்டன.

ஆச்சாரியார் மீது நம்பிக்கையின்மை தெரிவித்தவர்கள் மீது, ஒழுங்கு நடவடிக்கை எடுக்கக்கூடாது என்று, அகில இந்திய காங்கிரஸ் குழு செயலாளர் டாக்டரைக் கேட்டிருக்கும் செய்தியும் ஆச்சாரியாரைச் சார்ந்தவர் இதழில் வந்தும் இருக்கிறது.

இவையும் கணக்கில் கொண்டு பார்க்கின்றபொழுது, காங்கிரஸ் மேலிடத்தைப் பொறுத்தவரையில் ஆச்சாரியாரின் பதவி நீடிப்புக்கு, தற்காலிகமாக ஆபத்தில்லை என்பது விளக்கமாகி விட்டது!

ஆனால், ஆச்சாரியாரின் பதவி நீடிப்பை காமராஜர் ஏற்றுக்கொண்டதாகவும், ஆதரவாக அறிக்கை வெளியிடுவதாக அவர் ஒப்புக்கொண்டதாகவும் குறிப்பிடப்பட்டிருந்த காங்கிரஸ் பாராளுமன்றக் குழு முடிவு என்ன ஆயிற்று என்பது இன்னும் இருட்டறை சமாசாரமாகவே இருந்து வருகிறது!

அமைச்சர் ஆச்சாரியார் 4-ந் தேதி பிற்பகல் டில்லி போய்ச் சேர்ந்தார்; 7-ந் தேதி பிற்பகல் சென்னை வந்து சேர்ந்துவிட்டார். டெல்லி பல்கலைக் கழகம் ஆச்சாரியாருக்குக் கொடுத்த 'டாக்டர்' விருதில் ஒரு பொழுதை அவர் கழித்துவிட்டார். ஒரு பொழுதில், தனது பதவி நீடிப்புக்கு பண்டிதரிடம் 'முத்திரை'யும் பெற்றுக்கொண்டு ஆச்சாரியார் வீடு திரும்பிவிட்டார்.

ஆனால், காமராஜர் இன்னமும் வீடு திரும்பவில்லை. டெல்லியிலேயே தங்கி இருக்கிறார். அவர் ஆச்சாரியாரை ஆதரித்து வெளியிடப்போவதாகச் சொல்லப்பட்ட அறிக்கையும் இன்னும் வெளிவரக் காணோம்.

காஷ்மீர் பண்டிதரும், தமிழ்நாட்டு குல்லூகபட்டரும் கூட்டாகச் சேர்ந்து செய்த சதியில் சிக்கிய தமிழ் மறவர்—திராவிட வீரர், மெல்லவும் முடியாமல், விழுங்கவும் முடியாமல் மாற்றார் சிறையில் மாட்டிக்கொண்டு கதி கலங்கி நிற்கிறார்! இதுதான் உண்மை! நிற்க,

அமைச்சர் ஆச்சாரியார் இங்கே ஆர்ப்பாட்டம் புரிகிறார்! காமராஜரை விண்ணுக்கு உயர்த்தி வைத்து பிரதாபம் பாடுகிறார்!

தமிழ் மறவனை முதலில் குத்திப் பலிகொடுத்து விட்டு, தமிழ் வீரனை வஞ்சகத்தால் வீழ்த்திவிட்டு, தம் மினத்தவர் முன் விழிக்க முடியாத அளவிற்கு அவமானச் சின்னமாக காமராஜரைக் கவிழ்த்துவிட்டு அந்த சாமர்த்தியத்தால் பெற்ற வெற்றியை இதோ வந்து ஆச்சாரியார் கேளிக்கை நடத்துவதோடு அந்த மாவீரரைப் புகழ்ந்தும் பேசுகிறார்! வேலை தருகிறார் விசித்திர! இது கண்டு, காங்கிரஸ் சட்டசபை திராவிடர்கள் ரத்தக் கண்ணீர் சொரிவர் என்பது முக்காலும் உறுதியாகும். நிற்க,

ஆச்சாரியார் சொல்லுகிறார், 'காங்கிரஸைக் காப்பதிலே காமராசருக்கு அதிக அக்கறை; எனக்கும் அப்படித்தான்' என்று வெண்ணெயும் சுண்ணாம்பும் மட்டுமல்ல, வல்லூறும் ஒன்று என்பது போல உரக்கக் கூவுகிறார்!

டெல்லியிலிருந்து வெற்றிக் களிப்பிலே வந்த ஆச்சாரியார் விடுத்த அறிக்கை, அவருடைய ஆணவத்தையும், இவற்றையும் காட்டுவதாக இருக்கிறதேயல்லாது, எதிர்ப்பு செய்த சட்டசபை உறுப்பினர்களின் ஒத்துழைப்பைக் கோருவதாக இல்லை.

தோல்வியினால் உள்ளம் உடைந்து, முகத்தைத் தொங்கவிட்டு நிற்கும் பயல்களைப் பார்த்து, தம்பி நகைகளால் முகத்தைத் தூக்கி நிறுத்தி, 'என்னை எதிர்த்தீர்களே, பார்த்தீர்களா? என் வெற்றியைக் காணுங்கள்!' என்று கூறி, முகத்தை விகாரப்படுத்துவதுபோல இருக்கிறது!

'நல்லவர், என் எதிரிகளின் அரசியலைக் கொல்லட்டும்; அவர்களுடைய வஞ்சகத் தந்திரங்களை முறியடிக்கட்டும்' என்று ஆங்கில நாட்டுப் பண்ணைக் காட்டி, தம்மை எதிர்த்த காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர்களின் ஒத்துழைப்பைக் கோரி இருக்கிறார். ஒரு எஜமானனுக்கு—அவன் வளர்ப்பு பூனைக்கும் இருக்கும் உறவுமுறை போலத்தான், ஆச்சாரியாரின்

கல்லக்குடி துப்பாக்கிப் பிரயோகம்

பலியானோருக்கு அனுதாபம் தெரிவித்தது சங்கு ஊதியது தவறு?

அமைச்சர்—தூதுக் குழுவினர் சந்திப்பு.

சென்னை டிச 10—

"கல்லக்குடி துப்பாக்கிப் பிரயோகத்தைக் கண்டித்து சங்கு ஊதிய திருப்பத்தூர் நகர சபையைக் கலைக்க, அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது."

இதை யொட்டி, தோழர்கள் ராகவ முதலியார் எம்.எல்.ஏ.யும், நகர சபைத் தலைவரும், இன்று அமைச்சர் ராஜாராம் நாயுடுவை சந்தித்தனர்.

காங்கிரஸின் எதிர்க் கட்சியினர் அந்த நகர சபையில் பலர் வெற்றிருக்கிறார்கள்; அதை ஏன் கலைக்கக் கூடாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு அரசாங்கம் நோட்டீஸ் கொடுத்திருக்கிறது.

மொத்த உறுப்பினர் 18 பேர்களில் 16 பேர் கூடி நகர சபையைக் கலைக்கக் கூடாதென தீர்மானம் நிறைவேற்றினர். அத்தீர்மானத்தை தூதுக் குழுவினர் அமைச்சரிடம் விவாதித்ததாகச் சொல்லப்படுகிறது.

கல்லக்குடி துப்பாக்கிப் பிரயோகத்தைக் கண்டித்து அந்த நகர சபை தீர்மானம் நிறைவேற்றியது. அதோடு அதற்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் நகரசபையின் சங்கு மூன்று நிமிட நேரம் ஊதப்பட்டது.

இச்செயல் நகர சபை அதிகார வரம்பிற்கு அப்பாற்பட்டது என்றும், அதை கலைக்கக் கூறப்படும் காரணத்தில் இது தலையாயது என்றும் கூறப்படுகின்றது.

மக்கள் கல்லடிப்பார்கள் என்று...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தக்கதல்ல என்றும், குறிப்பாக இந்தியாவின் பொருளாதாரவளத்தை நிலைபெறச்செய்வது தான் முக்கியமானது என்ற நிலைப்பு, பலர் இடத்தில் இருப்பதாகவும் தாம் அழுத்தம் திருத்தமாக கூறுவதாக பட்டேல் கூறினார்.

இது ஒரு பக்கம் இருக்க, பாகிஸ்தானுக்கு அமெரிக்காவின் ராணுவ உதவி கிடைக்கக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுவதில் வெறு தலைகாட்டிக் கொண்டு இருக்கிறது.

"பொது மக்களிடத்தில் தொடர்பு கொள்ளுவதுதான், தங்கள் தலையாயக் கடன் என்பதை காங்கிரசார் இப்பொழுது அலட்சியப்படுத்தி விட்டார்கள் அவர்களில் சிலர், தாங்கள்தான் விடுதலை வாங்கிக் கொடுத்ததாகவும், அதனால் தாங்கள் சமூகத்தில் உயர்ந்த ஜாதியாகி விட்டதாகவும் கருதிக்கொண்டு உள்ளனர்."

'மற்றவர்களுக்குக் கட்டளையிடும் மனநிலையை காங்கிரஸ் கட்சியினர் விட்டொழிக்க வேண்டும். இல்லையானால் தங்களுடைய அழிவைத் தாங்களே தேடிக்கொண்டவர்களாவார்கள்!

'எல்லா மக்களிடமும் பரவலாக ஏமாற்றம் நிலவி இருப்பதை நான் அறிகிறேன். இந்தியா போன்ற பெரிய நாட்டில் 1,30 000 பேர் தான் வட்டார ராணுவத்தில் சேர்ந்திருப்பது கண்டு

இப்போது இருக்கிறது என்று குறிப்பிடுவதற்கு நமது கை உண்மையிலேயே நடுங்குகிறது. நிற்க,

'எனது கட்சியாரிடமிருந்து பூர்ண ஆதரவை எதிர்பார்க்க எனக்கு உரிமை உண்டு' என்றும் ஆச்சாரியார் அந்த அறிக்கையில் குறிப்பிட்டு இருக்கிறார். உண்மைதான்!

ஆதரவாளர்களுக்கு மதிப்பும் அவர்கள் வார்த்தைகளுக்கு இணக்கமும் காட்டவேண்டிய பொறுப்பும் கடமையும் தமக்கும் உண்டு என்பதை, 75 வயதாகியும் கூட ஆச்சாரியார் உணர்ந்துகொண்டு நடக்கக் கூடிய அளவிற்குப் பண்பும், பக்குவமும், அறிவும் பெற்றிருக்கவில்லையானால், இனிமேலா பெறப்போகிறார் அந்த முதியவர்? யார் நம்புவது?

ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?

ஆச்சாரியாரின் ஆணவப் போக்கை நன்கு உணர்ந்திருப்பதாலும், தமக்குப் பிடித்தமாக இல்லாது இருப்பதாலும்தானோ என்னமோ, 'பாரததேவி' தலையங்கத்தாரான ஆரணி 'சுபோதயம்' அரங்கசாமி அய்யங்கார், அது 'காங்கிரஸ் எம். எல். ஏ.க்களின் உள்ளங்களைத் தொடும் என்று நம்புகிறோம்' என்று சுரெட்டாகக் கூறினார்!

'உள்ளத்தைத் தொடும்' என்று உறுதிப்படுத்திக் கூறாமல், 'நம்புகிறோம்' என்று ஐயப்பாட்டோடு கூறிவிட்டு, 'அவரது அறிக்கையைத் தவறாக யாரும் உணரக் கூடாது' என்று கட்டளையிடாமல், 'கேட்டுக் கொள்கிறோம்' என்று முடித்திருக்கிறார். ஆச்சாரியாரின் அறிக்கை, காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர்களின் உள்ளங்களைத் தொட்டு மட்டுமா இருக்கிறது (?) உள்ளத்தையே பிளந்தும் இருக்கிறது!

'தவறாக' ஆச்சாரியார் சொல்லாமல் இருந்தால், 'தவறாக' ஏன் சட்டசபை உறுப்பினர்கள் புரிந்து கொள்ளப் போகிறார்கள்? 'ஆச்சாரியார் அவர்களே 'தவறாக' சொல்லாதீர்! நேர்மையாகச் சொல்லுங்கள்!' என்று ஆச்சாரியாருக்கு 'பாரத தேவி' தலையங்கத்தார், கன்னத்தில் அறைந்ததுபோல் இல்லையானாலும், கொஞ்சம் நயமாகவாவது கோடிகாட்டி இருக்கவேண்டும். இதைப்பற்றி ஆரணி அரங்கசாமியாருக்கு ஒன்றுமே தோன்றவில்லை தடுத்துவிட்டது! அவர் என்ன செய்வார் பாவம்!

காங்கிரஸ் குழுவின் விவகாரத்தைப் பற்றி நாம் எழுதுவது, ஆச்சாரியார் ஆதிக்கத்தைத் தொலைத்து, அந்த இடத்தில் காமராஜர் ஆதிக்கத்தை ஏற்றி வைத்து, முடிசூட்டி மகிழ்வதற்கு அல்லவே அல்ல. பின் எதற்கு எனின், அமைச்சர் ஆச்சாரியார் போன்ற ஜனநாயகக் கோட்பாட்டினர்தான் காஷ்மீர் பண்டிதர் என்ற உண்மையை திராவிடர் உணரச் செய்யவும், வடநாட்டு மோகம் திராவிட இனத்திற்கு உள்ளவரையில், இத்தகைய அவமானச் சம்பவங்கள் திராவிடருக்கு உண்டாகத்தான் உண்டாகும் என்பதை உணர்த்தவுமே, இவ்வளவும் எழுதுகிறோம் என்பதை அறிவித்துக் கொள்ளுகிறோம்.

மதியழகன் பேச்சு:

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கழகச் செயலாளராக இருந்து என்னை வரவேற்றார்!

"அடக்குமுறை எக்காலத்திலே வெற்றி பெற்றது? அடக்குமுறை என்றேதான் வெற்றி பெற்றது? நீரோ மன்னன் காலத்திலாயினும் சரி, நிக்கலஸ் மன்னனின் குடையின் கீழும் சரி, வெற்றிபெற்றதில்லை; வெற்றியும் பெறாது.

"இங்கிலாந்திலே சார்லஸ் மன்னன் தலைவிரித்தாடினான்; தான் இட்டதே சட்டமென்றான்; கடைசியிலே அவன் தலை, மக்களால் வெட்டப்பட்டது; வெட்டப்பட்டதுமட்டுமல்ல; வெட்ட வெளி மைதானத்தில், மாளிகை முன் வைத்து, — 'அரசன் நான்; ஆண்டவனின் பிரதிநிதி நான்' என்று ஆட்டம்போட்ட இதோ அந்த அக்கிரமக்காரன், கயோக்கியன்— என, எதிர்காலத்துக்கு ஒரு பாடமாக, ஒரு வரம் வைக்கப்பட்டதாம்! 'கடைசி மன்னனின் தலை இதுதான்,' என்றும் கேலி பேசப்பட்டதாம்!!

தூத்துக்குடி சதி வழக்கு வெற்றிபெற நீங்கள் தரும் உதவிதான் எனக்கும், அண்ணாவுக்கும், இயக்கத்துக்கும் நீங்கள் உண்மையாக தரும் வரவேற்பு ஆகும். எனக்கு வரவேற்பு அளித்த எல்லா நண்பர்களுக்கும், பெரியோர்களுக்கும், தாய்மார்களுக்கும், கிளைக் கழகங்கள் அனைத்திற்கும் என் நன்றி!--வணக்கம்!!"

நான் நினைப்பது ஒன்றுதான்; காங்கிரஸ் ஆட்சியின் மீது மக்களுக்கு ஏற்பட்டுள்ள வெறுப்பின் காரணமாகவே இடைத்தேர்தல்களில் காங்கிரஸ் கட்சி தோற்றுப் போய் இருக்கிறது என்பது எனக்குத் தெரியும். பொது மக்கள், அடிக்கடிக்கு ஆட்சியாளர்களைக் கல்லால் அடித்து வருவதும், சில காங்கிரஸ்காரர்கள், எங்கே தங்களை மக்கள் கல்லாலடிப்பார்களோ என்று அஞ்சிக்கொண்டு இருப்பதும் எனக்கு நன்றாகத் தெரியும்."

இப்போது ஏற்பட்டு இருக்கின்ற தொல்லைகளுக்கெல்லாம் மொழி மாநில அமைப்பு மோகந்தான் காரணம்

கடந்த 175 ஆண்டுகளாக பல மொழியினர் ஒரே மாநிலங்களில் கூடிக் கிடந்திருக்கும் பொழுது, மேலும் சில காலம் அப்படியே ஏன் இருக்கக்கூடாது என்பதற்கு காரணம் ஏதாவது இருக்கிறதா?"

'பதவி மோகமும், அதிகார ஆசையும் மலைப் பசியாக எங்கும் வளர்ந்துபோய் இருக்கிறது என்பதும், அதுவே தேச ஒற்றுமைக்குக் கேடு சூழ்வதாக இருக்கிறது என்பதும் எனக்குத் தெரியும்.'

இதுவும் — தமிழ்தான்!

"முதலில் கூட்டம் டபிள்யூ. டி. எப். (ஐக்கிய தேசிய முன்னணியிலிருந்து) விலகலாமென்றும், சட்டசபையில் தனிக் கட்சியாக வேலை செய்யலாமென்றும் முடிவு செய்யப்பட்டு, கட்சிக்கு திராவிட சட்டசபை கட்சி என்று பெயரிடலாமாய் முடிவு செய்யப்பட்டது."

—சென்னை சட்டசபை கட்சிச் செய்தி பற்றி ...[illegible] 'தினமணி'

தூத்துக்குடி சதி வழக்கு:

"போலீசார் என்னை அடித்து, சாட்சியச் சொல்ல நிர்ப்பந்தித்தனர்"

'அது எனக்குப் படித்துக் காண்பிக்கப்படவில்லை"

"நடராஜனை எனக்குத் தெரியாது"

"போலீசார் 2 அல்லது 3 தினங்கள் கைகளாலும், தடிகளாலும் என்னை அடித்தனர்"

"......போலீசார் பலாத்காரத்தில் இறங்கினால், அக்கிரகாரத்தில பலாத்கார செயல்களில் இறங்க வேண்டுமென்று தோழர் நடராஜன் பாதையில் உட்கார்ந்திருந்தவர்களிடம் கூறியதாகச் சொல்வது தவறு; எனக்கு நடராஜனைத் தெரியாது; நான் வீட்டுக்குச் சென்று கொண்டிருக்கையில், கூட்டத்தினர் கோஷமிட்டுக் கொண்டு அக்கிரகாரத்தை நோக்கி ஓடியதாக கூறுவது தவறு; பஸ் ஸ்டாண்டு முன்புள்ள பிராமணர் ஓட்டல், கூட்டத்தினரால் தாக்கப்பட்டதாகக் கூறப்படுவதும் தவறு; டவுன் பஸ் நிறுத்தப்பட்டதா என்பதுபற்றி எனக்குத் தெரியாது; பிரயாணிகளை பஸ்ஸிலிருந்து இறங்கும்படியாகக் கூட்டத்தினர் கூறினார்களா என்பது எனக்குத் தெரியாது; கூட்டம், புதுக்கிராமத்துக்குச் சென்று, கண்ணாடி, போட்டோக்களை உடைத்தனரா என்றும் எனக்குத் தெரியாது; சப்-மாஜிஸ்திரேட்டிடம் நான் அவ்வாறு கூறியதற்கு போலீசார் நிர்ப்பந்தமே காரணம்..."

திருநெல்வேலி, டிச. 9—தூத்துக்குடி சதி வழக்கு இன்று மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

19-வது சாட்சி

பிராசிக்யூஷன் தரப்பில் 19 வது சாட்சியாக கருப்பசாமி விசாரிக்கப்பட்டார். அவர் சத்திய மனிக்கையில் கூறியதாவது:

"தூத்துக்குடியில் ஸ்டேஷன் முன் புறத்தில வசிக்கிறேன்; மரக் கடை ஒன்றில வேலை செய்கிறேன்; சென்ற ஜூலை 15-ந் தேதி கடைக்குச் சென்றேன்; ஆனால், வேலையில்லை; அன்று டிராயின் கள் நிறுத்தப்பட்டு என்ற சுவரொட்டிகள் மூலம் விளம்பரம் செய்யப்பட்டிருந்ததைப் பார்த்தேன்; மேலும், ரயில்வே ஸ்டேஷனுக்குச் சென்றேன்; ரயில்வே கட்டடத்திற்கு வெளியே ரயில் பாதையின் வடபுறத்தில் நின்று கொண்டிருந்தேன்; சுமார் 50 பேர்கள் பாதையில் உட்கார்ந்து கொண்டிருந்தனர்; டிரெயின் ஸ்டேஷனில் வந்து நின்றது; பாதையில் உட்கார்ந்திருந்தவர்கள் மீது போலீசார் தடியடிப் பிரயோகம் செய்தனர்; ரயில்வே ஸ்டேஷனுக்கு இரு புறங்களிலும் நின்று கொண்டிருந்த கூட்டம் போலீசார் மீது கற்களை வீசியது; துப்பாக்கிப் பிரயோகம் செய்வதாக போலீசார் எச்சரிக்கை செய்தனர்; நான் பயந்துகொண்டு ஓடிவிட்டேன்; சுமார் 10 அல்லது 12 தினங்கள் கழித்து மார்க்கெட்டிலிருந்து போலீசாரால் அழைத்துச் செல்லப்பட்டேன்; போலீசார் என்னை அடித்து சாட்சியம் கொடுக்குமாறு நிர்ப்பந்தித்தனர்."

இந்தக் கட்டத்தில், பிராசிக்யூட்டர் எழுந்திருந்து, சாட்சியை 'விரோதியாக' பாவிக்க கோர்ட்டார் அனுமதி வேண்டுமென கோரினார்; கோர்ட்டார் இதற்கு அனுமதியளித்தனர்.

குறுக்கு விசாரணை

பிராசிக்யூட்டரால் குறுக்கு விசாரணை செய்யப்பட்டபோது சாட்சி கூறியதாவது:—

"நான் தூத்துக்குடி சப்-மாஜிஸ்திரேட் முன் வாக்குமூலம் கொடுத்தேன்; (இந்த வாக்குமூலம் சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டது) சப்-மாஜிஸ்திரேட்டிடம் நான் கொடுத்த வாக்குமூலம் எனக்குப் படித்துக் காண்பிக்கப்படவில்லை; எனினும், நான் அதில் கையொப்பமிட்டேன்; அதில் உள்ள கையொப்பம் என்னுடையதே. போலீசார் பலாத்காரத்தில் இறங்கினால் அக்கிரகாரத்தில் பலாத்காரச் செயல்களில் இறங்க வேண்டுமென்று, நடராஜன், பாதையில உட்கார்ந்திருந்தவர்களிடம் கூறியதாகச் சொல்வது தவறு. எனக்கு நடராஜனைத் தெரியாது; நான் வீட்டுக்குச் சென்று கொண்டிருக்கையில் கூட்டத்தினர் கோஷமிட்டுக் கொண்டு, அக்கிரகாரத்தை நோக்கி ஓடியதாகக் கூறுவது தவறு; பஸ் ஸ்டாண்ட் முன்புள்ள பிராமணர் ஹோட்டல் கூட்டத்தினரால் தாக்கப்பட்டதாகக் கூறப்படுவதும் தவறு; டவுன் பஸ் நிறுத்தப்பட்டதா என்பதுபற்றி எனக்குத் தெரியாது; பிரயாணிகளை பஸ்ஸிலிருந்து இறங்கும்படியாக கூட்டத்தினர் கூறினார்களா என்பது எனக்குத் தெரியாது; கூட்டம் புதுக்கிராமத்துக்குச் சென்று, கண்ணாடி போட்டோக்களை உடைத்தனரா என்றும் எனக்குத் தெரியாது; சப்-மாஜிஸ்திரேட்டிடம் நான் அவ்வாறு கூறியதற்கு போலீசார் நிர்ப்பந்தமே காரணம்.

"நான் அந்த வாக்குமூலம் கொடுத்து 3 மாதமாகிவிட்டது; தூத்துக்குடியில் எனக்குப் பல உறவினர்கள் உண்டு; போலீசார் என்னை அடித்தது பற்றியோ, சாட்சியம் கொடுக்க நிர்ப்பந்தித்ததையோ என் உறவினர்களிடம் கூறவில்லை; நான் நாடார் கடையில் வேலை செய்கிறேன்; சாட்சியம் கொடுக்க போலீசார் என்னை நிர்ப்பந்தித்ததாக அவரிடம் கூறவில்லை; எனக்கு சகோதரர் ஒருவர் உண்டு; வாக்குமூலம் கொடுத்த பிறகு ஒரு மாதம் கழித்து, சப்-ஜெயிலுக்கு அழைத்துச் செல்லப்பட்டேன்; சிலரை அடையாளம் காட்டுமாறு கேட்டனர்; அடையாள அணிவகுப்பில் 91, 92, 93-வது எதிரிகளை அடையாளம் காட்டினேன்; இந்த எதிரிகள், புதுக் கிராமத்தில குடியிருந்தவர்களோடு இருந்ததாகக் கூறினேன்."

"என்னை போலீசார் 2 அல்லது 3 தினங்கள் கைகளாலும், தடிகளாலும் அடித்தனர்; எனக்குக் காயம் எதுவும் ஏற்படவில்லை."

எதிர் தரப்பு வக்கீல் இச் சாட்சியைக் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

20-வது சாட்சி

பிராசிக்யூஷன் தரப்பில் 20 வது சாட்சியாக அருணாசலக் கோனும் விசாரிக்கப்பட்டார்.

அவர் கூறியதாவது:

"புதுக் கிராமம் கூட்டுறவு பண்டகசாலையில் குமாஸ்தா வேலை பார்க்கிறேன்; வழக்கம் போல், ஜூலை 15-ந் தேதி காலை 7-30 மணிக்கு கடைக்குச் சென்றேன்; காலை 8-45 மணிக்கு மத்திய பஸ் ஸ்டாண்டுக்கு எதிரே உள்ள அபிலாஷ் ஹோட்டலில் காப்பி சாப்பிடுவதற்குச் சென்றேன்; காப்பி குடித்துவிட்ட பிறகு வெளியே வந்தேன்; சுமார் 20 பேர்கள் கோஷமிட்டுக் கொண்டு வருவதைக் கண்டேன்; கூட்டத்தினர் ஓட்டலுக்கு வந்தனர்; கூட்டத்தில இருந்த சிலர் புதுக் கிராமத்துக்குச் செல்லவேண்டுமென கூறினர்; நான் கடைக்கு சைக்கிளில் சென்று இந்த தகவலை மானேஜரிடம் கூறினேன்; கடை பிறகு மூடப்பட்டது; டாக்டர் ஒருவரான வக்கீல் சீதாராம அய்யர் புதுக் கிராமத்தில் இருக்கிறார்; நான் அவர் வீட்டுக்குச் சென்று தகவலை அவரிடம் தெரிவித்தேன்; பிறகு கடைக்குத் திரும்பினேன்; சுமார் 20 பேர் கொண்ட கூட்டம் கைகளில் தடிகளை வைத்துக்கொண்டு நின்றது; அவர்கள் வக்கீல் வீட்டின் தொங்கவிடப்பட்டிருந்த பெயர்ப் பலகைகளை உடைத்துக் கொண்டிருந்தனர்; டையின பலகையையும் அவர்கள் உடைத்தனர்; நான் பிறகு ஓடிவிட்டேன்; போலீசாரிடம் இவைபற்றி பிறகு கூறவில்லை; விசாரித்தார்; கூட்டத்தில் யாரையும் என்னால் அடையாளம் கண்டுபிடிக்க முடியவில்லை"

21-வது சாட்சி

21-வது பிராசிக்யூஷன் சாட்சியாக சுப்பையா மகனும் விசாரிக்கப்பட்டார். அவர் கூறியதாவது:—

"தூத்துக்குடி விற்பனை வரி அதிகாரி காரியாலயத்தில் நான் சேவகராக வேலை செய்கிறேன்; இந்த அதிகாரி, பெருமாள் கோவில் அருகே புதுக் கிராமத்தில் வசித்து வருகிறார்; இவரது வீடு கூட்டுறவுச் சங்கத்திற்கு எதிர் வரிசையில் இருக்கிறது; சுமார் 4 மாதங்களுக்கு முன் நான் அதிகாரியின் வீட்டிற்குச் சென்றேன்; வீட்டின் கதவு மூடப்பட்டிருந்தது; பிறகு வீட்டுக்குச் சென்று அதிகாரியைச் சந்தித்தேன்; தம் வீட்டில் யாரோ சிலர் கற்களை வீசியதாகப் பிறகு என்னிடம் அவர் கூறி வீட்டுக்கு வெளியே இருக்கும்படி கூறினார்; நான் கதவுகளை மூடிவிட்டு, சாப்பாட்டுக்கு கேட்டில் உட்கார்ந்திருந்தேன்; அதிகாரி மார்க்கெட் சென்றார்; கொஞ்ச நேரம் கழித்து சுமார் 40 பேர் கொண்ட கூட்டம் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வந்தது; அவர்களிடம் தடிகள் இருந்தன; கூட்டத்தைப் பார்த்தவுடன் நான் உள்ளே ஓடிவிட்டேன்; கூட்டத்தினர், வீட்டின் மீது கற்களை வீசினர், சாம்பவுண்டு கேட்டையும் சேதப்படுத்தினர்; நான் கூட்டத்திலிருந்தவர்களை அடையாளம் காட்ட முடியும்; சில எதிரிகள் எனக்குக் காட்டப்பட்டனர்; ஆனால், நான் அவர்களை கூட்டத்தில பார்த்ததாக அடையாளம் காட்ட முடியவில்லை."

இந்த சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை (ச கி)

தோழர் எம். ரத்தினம்

தூத்துக்குடி சதி வழக்கில் இணைக்கப்பட்ட தோழர் எம். ரத்தினம், மலேரியா காய்ச்சலால் பாதிக்கப்பட்டிருப்பதால் டாக்டர் அமரோஸ் சிகிச்சை செய்து வருகிறார்; உடல்நிலை குணமடைய, 15 தினங்கள் சிகிச்சை பெற வேண்டுமென்று டாக்டர் கூறினர்.

தோழர் மதியழகன் பேச்சு:

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

"'ஆரியர்—திராவிடர் என்பது வெறும் கற்பனை; திராவிடம் எது?' என்கின்றனர்; திராவிடம் என்ற சொல்லைக் கேட்டவுடனே, நமது மனக்கண் முன் நிச்சயம் தெரிகிறது—இமயப் பனி மலையிலே தமிழ் மன்னன் செங்குட்டுவன் சென்று, இலச்சினையைப் பொறித்து, கனக—விசயன் மீது கல் ஏற்றி தமிழகத்துக்கு நடைபோட்டு வருவதுபோலவும், சேர நாட்டு பெருமான்கள் ஆற்றிலே நீர் உண்டு நிற்பது போன்ற அரிய காட்சியும், புகார் நாட்டிலே சோழ மன்னனின் படை நிற்கும் வரிசையும், பாண்டியனின் கொலு மண்டபமும், இலக்கியப் பூங்காவிலே நம் மூதாதையர் இருப்பது போலவும்தெரிகிறது சுழுவுக்கும் சுழலுக்கும், குளுவுக்கும் அஞ்சாது, வில், புலி கயல் பொறித்த தமிழ்க் கொடியைக் கையிலேந்தி, தமிழரின் மேன்மையை விளக்கிட திரைகடல் தாண்டி, அயல் நாடுகளுக்குச் சென்ற அந்தத் திராவிடத் தீரரின் மாக்கலன்கள் நம் கண் முன்னே வருகிறது—இதனைக் கற்பனை என்கிறார்கள், கற்பனையின் வழிவந்தவர்கள்!"

—இவ்வாறு, சிறை மீண்ட தி மு. கழகத் தமிழ்ச் சொல்லேர் தோழர் நெ. து மதியழகன் அவர்கள். சென்னை திரு வி. க நகரில் (சண்முகம்பிள்ளை மைதானம்) நடைபெற்ற வரவேற்புப் பொதுக் கூட்டத்தில் பேசும்போது கூறினார்.

அனைவருக்கும் நன்றி தெரிவித்து மேலும் அவர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"சிறைக்குள்ளே, பார்த்துப் பார்த்துப் புளித்துப் போன காட்சியின் நீங்கி இங்கே களிதரும் கண்களையும், ஒளிதரும் முகங்களையும், ஆயிரமாயிரம் ஆர்வக் குன்றுகளையும் காண்கிறேன்; உவகை மகிழ்கிறேன்.

"எனக்கு இங்கே பலகழகங்கள் சார்பில் மாலைகள் அணிவிக்கப்பட்டன—நான் அப்போது நினைத்தேன்—இம் மாலைகள், காலை உலர்ந்து போகும்; ஆனால், உங்களின் இலட்சிய எழுச்சி, அன்புள்ளம் ஆகியவை, அப்படி உதிர்ந்து போகக் கூடியவை அல்ல.

"ஏதோ, ஒரு மதியழகனுக்கா இம்மாபெரும் வரவேற்பு?—அல்ல, அல்ல—அண்ணாவின் சோல்ஜருக்கு, ஒரு சிறு மரியாதை என்றே கருதுகிறேன்.

"மிகப் பெரும மாலையை, என்னால் சுமக்க முடியாத மாலையை, சென்னை மாவட்டச் செயலாளர் எனக்கிட்டார். உண்மையில் என்னால் அதைச் சுமக்க முடியவில்லை;—இந்த ஆட்சியிலே இன்னும் என்னவோ அடக்கு முறைச் சுமைகளைச் சுமக்க வேண்டியிருக்கிறதே — அதற்கொரு நல்ல பாடமாக. ஆனாலும் உள்ள உறுதியையும் எனக்கு அது அளிப்பதாகவே இருந்தது.

"அடக்குமுறை எக்காலத்திலும், எங்கும் வெற்றிபெற்றதில்லை. துப்பாக்கியும், தூக்கு மேடையும் விடுதலை வீரர்கள் வாழ்வில குறுக்கிடலாமே தவிர, அவர்களின் இலட்சியத்தை வீழ்த்த முடியாது; கதிர் ஒளியைக் கார்மேகமும் கேடேன் மறைக்க முடியாது"

'நான் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே படித்திருக்கும்பொழுது, 'திராவிட இயக்கத்தைச் சார்ந்தவன்' எனக் குற்றஞ்சாட்டப்பட்டு, பல்கலைக் கழகத்திலிருந்தே நீக்கப்பட்டு, அதைச் சுற்றி 3 மைல் வட்டாரத்தில நான் நுழையக் கூடாதென்று தடை செய்யப்பட்டு, என் மீது வழக்கும் பதிவு செய்தனர்; அபராதம் விதித்தனர்; பின்னர், நான் நிரபராதி எனத் தீர்ப்பும் தந்தனர்.

'ஏன், இதனைக் குறிப்பிடுகிறேன் என்றால், நான் மூன்று மாதங்கட்குமுன், சிறை செல்வதற்கு முன் நடைபெற்ற கூட்டம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தான்! எந்த நீதிபதியின் முன் நான் குற்றவாளிக் கூண்டிலே நிறுத்தப்பட்டேனோ, தண்டிக்கப்பட்டேனோ, அதே நீதிபதியின் அருமை மகன்தான், அன்று நடைபெற்ற கூட்டத்தில், தி மு. மாணவர்

(4-ம் பக்கம் பார்க்க)

திராவிடத்தை....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அவர்கள் ஆற்றிய உரையின் சுருக்கமாவது:—

"சென்னை கடற்கரையிலே சென்ற 30-ந் தேதி, எங்களுக்கு நடைபெற்ற வரவேற்பு விழாவில் கலந்துகொள்ள நாங்கள் முடியவில்லை; ஆனால், இன்று கூட்டத்தோடு நாங்களும் சேர்ந்து தோழர் மதியழகனை வரவேற்பு போது எங்களுக்கு அளவிலா மகிழ்ச்சி ஏற்படுகிறது.

"நாங்கள் இன்று இரண்டோ அல்லது மூன்றோ மாதமோ கழித்து, மீண்டும் செல்லலாம்! இந்த வரவேற்புக் கூட்டம், இடைக்காலத்தில், நமது எதிர்கால திட்டத்தை விளக்கவே, என்று நான் கருதுகிறேன்.

"தி மு கழகத்தின் பதவி, போட்டிக்கோ, அரசியல் சூழ்ச்சிக்கோ இடமில்லை என்பதை நன்கு அறிந்திருக்கும் ஆச்சாரியார் ஏன் பயப்படவேண்டும்?

"தேசத்தையே முழு எதிர்ப்பையும் பெற்றுவிட்ட ஆச்சாரியார் ஆட்சி, தேனீக்களுடைய வட நாட்டு ஆளவந்தாராலும், எப்போதோ கவிழ்ந்திருக்கும். குலவட்டக் கல்வித் திட்டத்தை மறந்துவிட வேண்டாம். இந்த வட்டத்தில்தான ஒரு மனிதத் தேர்தல், வாழ்வழிமுறை விதியிலே சேர்த்தான். என்ன இதற்கு அர்த்தம்? சுதந்திரம் பெற்று இந்த ஆண்டு ஆண்டுவிட்டதா? ஆட்சியிலேயோ தவிர, கட்டிலே அல்ல."

"கோவையிலும் ஆச்சாரியார் டில்லி போனார்; டாக்டர் பட்டம் பெற்று, பதவி உறுதியோடு திரும்பி வந்தார்! என்னே இராஜதந்திரம்? எனவே, தொழிலாளர்கள் அனைவரும், நடைபெறும் போராட்டத்திலே பங்குகொள்வோம்! போராடுவோம்!"

"நாம் மட்டும் இங்கு சாட்டுப் பிரிவினை கேட்கவில்லை; சீக்கியர்கள் நாடானது அடிக்கிறார்கள்; பஞ்சாப் மக்களுக்காக தாராசிங் முழங்குகிறார்; மராட்டியத்திலும் 'மொழி வழி மாகாணம் அமைய' எதிர்ப்பு கிளம்பி விட்டது; எனவே, மெது இடையில் மட்டும், இன்பத் திராவிடத்தை அடைய இன்னும் அதிக நாள் இல்லை."

"திராவிட மொழிக் குடும்பம் வட மொழியினின்று முற்றிலும் மாறுபட்டது"

திராவிட மொழியை நாட்டு மொழியாக்க வேண்டும்

"வட நாட்டு மொழியில் தான், தமிழ் நாட்டு மாணவர்கள் எல்லாப் பாடங்களையும் படிக்க வேண்டும் என்ற சூழ்நிலை ஏற்படின், அச் சூழ்நிலையை அழிக்க, 'தமிழ் இளைஞர்கள்' புறப்படுவர்; அச் சூழ்நிலையை அழிக்கும் பாணி பாடுவர்."

—இவ்வாறு, அண்ணாமலை பல்கலைக் கழக தமிழ் விரிவுரையாளர் டாக்டர் அ. சிதம்பரநாதனார், 26—11—53 அன்று, அண்ணாமலை நகர் கோவலே மன்றத்தில் தமிழ் இலக்கியக் கழக 'முத்தமிழ்' கோவைச் சொற்பொழிவின் போது கூறினார்.

தொடர்ந்து அவர் பேசியதாவது:—

'வட மொழியில் திராவிட மொழிச் சொற்களையும், மரபுகளையும் புகுத்தி அதனையே பெரிய மொழியாக்குவதை விரும்புவார் சிலருண்டு. அவர்கள், 'வட மொழி தான் இந்தியாவில் உள்ள மொழிகள் அனைத்துக்கும் 'தாய் மொழி' என்றும், இந்திய மொழிகள் அனைத்தும் சமஸ்கிருதத்தினின்று தோன்றின' என்றும் கூறும் தவறான கருத்துடையவர்கள்."

'தென்னாட்டில், திராவிட மொழிக் குடும்பம், வடமொழியினின்று முற்றிலும் மாறுபட்டதனிக் குடும்பம் என்பதை எல்லோரும் அறிய வேண்டும்."

"இக் குடும்பத்தின் மொழிகளும், வடமொழிக்கும் பலப்பல மாறுபாடுகள் உண்டு. இலக்கண முறையும் முற்றிலும் மாறுபட்டது."

"திராவிட மொழிக் குடும்பத்தில், தமிழ், வடமொழிக் கலப்பின்றி தனித்து வாழவும், புதிய ஒளி பொருந்த மிளிரவும் செய்கின்றது. தென்னாட்டுத் திராவிட மொழிகள், தாய் மொழி, வடமொழி சமஸ்கிருதமன்று; முற்றிலும் மாறுபட்ட 'திராவிடக் குடும்ப மொழிகள்' சமஸ்கிருதத்தினின்று தோன்றியதுமல்ல; தோன்றியது என்று கூறுகின்றவர்கள் கூற்று, தமிழைப் பற்றியும், சங்கத் தமிழ் நூல்களைப் பற்றியும் அறியாதவர்களின் கூற்றாகும்."

"வட மொழியினை நாட்டு மொழியாக்கினால் அதனைச் சிலரே புரிந்துகொள்வதைக் காட்டினார், திராவிட மொழியினை நாட்டு மொழியாக்கினால் விரைவிலே புரிந்து கொள்ள முடியும்."

கோவையில் மருத்துவக் கல்லூரி நிறுவலாம்

அமைச்சர் சுப்ரமணியம் அறிவிப்பு

கோவை, டிச. 7—

கோயம்புத்தூரில் வைத்தியக் கல்லூரி திறவப்படுவது சாத்தியமென்று மாகில கல்வி அமைச்சர் சி. சுப்ரமணியம் இன்று இங்கு கூறினார்.

'கோவையில் நிறுவுவதா இருக்கும் கல்லூரியை ஒரு குழு நிறுவுவதா, அல்லது அரசாங்கமே நிறுவுவதா என்னும் விஷயம் ஆலோசனையில் இருக்கிறது' என்றார். வைத்தியக் கல்லூரி திறவப்பட்டுவிட்டால் பல்கலைக் கழகம் திறவிவிடலாம். காரணம், அதற்கான தகுதிகளை இந்த நகரம் பெற்றிருக்கின்றன,' என்றார்.

சென்னை—ஆந்திர உணவு மண்டல முறை

சென்னை, டிச. 9—

சென்னை—ஆந்திர மாநிலங்களுக்கிடையே இப்போதுள்ள உணவு மண்டலப் போக்குவரத்து முறை உடனடியாக முடிவுபெறும் என்றும், வரப்போகும் அறுவடையிலிருந்து ஆந்திரா—சென்னை இடையே இப்போதுள்ளது போல மாநிலத்திற்கு, மாநில அடிப்படையில் ஆந்திரா—சென்னையிடையே உணவுப் போக்குவரத்து ஏற்படுமென மந்திரி இதனைத் தெரிவித்தார்.

அரிசி சப்ளைக்கோ, விலை விஷயத்திலோ எதும் கஷ்டமிராதென தெரிவிக்கிறார்.

பலம் குறைந்தவர்களைச் சுரண்டுவது நிற்கவேண்டும்

மக்கள் எல்லோருக்கும் நன்மை ஏற்பட வகை செய்வதே சர்க்கார் கடமை!

சென்னை, டிச. 11—

"உலகில், சரி சமத்துவ சர்க்கார்கள் இப்போது நிலைப்பதில்லை. சமூகத்தில், பலவீனமானவர்களைச் சுரண்டும் வேலை நிற்க வேண்டும். பெண்களையும், குழந்தைகளையும் அதிக வேலை வாங்குவது—அளவுக்கு மீறி வேலை வாங்குவது என இதெல்லாம் இருந்து வருகின்றன; இவை கண்டிக்கத்தக்கதே யாகும்."

"பொருளாதாரத் துறையில் சர்க்கார் தலையீடு வரவர அதிக அளவில் பெருக வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது; சட்டம், அமைதி இவைகளைப் பாதுகாப்பது மட்டும் இனி சர்க்கார் முன்புள்ள வேலையல்ல. மக்கள் எல்லோருக்கும் நன்மை ஏற்படும் வகையில், நடவடிக்கைகளை மேற்கொள்வதும் சர்க்காரின் கடமையாகும்."

—இவ்வாறு டாக்டர் பி. வி. நாராயணசாமி அவர்கள், ரோட்டரி கிளப் கூட்டமொன்றில் பேசுகையில் கூறினார்.

அவர் மேலும் பேசியதாவது:—

'இந்தியப் பொருளாதாரத் துறையில் சர்க்கார் தலையீடு அவசியமேயாகும்; இதில் அபிப்பிராய பேதமிருக்க இடமில்லை; எந்த அளவுக்கு தலையீடு இருக்கலாம் என்பது பற்றி அபிப்பிராய பேதம் இருக்கலாம். ஆனால், பொருளாதார வினைச்சிப்புகளை வழி வகைகளை அளிப்பதே, சர்க்கார் தலையீட்டின் நோக்கமாக இருக்க வேண்டும்."

"நம் நாட்டில், மக்களின் வருமானம் மிகக் குறைவு; மக்கள் வறுமையால் வாடுகின்றனர்; கல்வியிலும் இன்னும் அபிவிருத்தி ஏற்படவில்லை; இம்மாதிரியான நிலையில் நமது பொருளாதாரத் துறையில சர்க்கார் தலையிட்டு உதவி செய்வதைவிட வேறு வழி எதுவுமில்லை. சர்க்கார் தலையிடாவிட்டால் பொருளாதாரத் துறையில் தேக்கம் ஏற்பட்டுவிடும்."

துறைமுக அபிவிருத்தி

புது டெல்லி, டிச. 8—

சிறிய துறைமுகங்களை அபிவிருத்தி செய்ய மாகில அரசுகளுக்கு மத்திய சர்க்கார் ரூ 80 லட்சம் கடன் வழங்கும்.

அத்தக்குடி, கடலூர், நாகப்பட்டணம், பருல்பட்டினம், காரைக்கால், கோழிக்கோடு ஆகிய துறைமுகங்கள் செப்பனிடப்படும்.

தென்னிந்தியர்களுக்கு மலேயா சாக்பர் நிலம்

கோலாலம்பூர், டிச. 8—

தென்னிந்திய தொழிலாளர்களை மலேயாவினர்களாகவே செய்யவி. மலேயா சர்க்கார் நிலம் அளிக்க முன்வரவேண்டும். இந்தச் சமயத்தை இந்தியர்கள் பயன்படுத்திக்கொண்டு மலேயா ஒரு சிறந்த தேசமாக திகழ்வதற்கு உதவ வேண்டுமென இந்திய சர்க்கார் பிரதிநிதி கூறினார்.

பார்ப்பன மக்கள் பிறமொழி கற்றதின் ரகசியம்?

முன்னாள் நீதிபதி எஸ். வரதாச்சாரியார் அம்பலப்படுத்துகிறார்!

சென்னை, டிச. 9—

அகோபில மட அழகிய சிங்கரின் நட்சத்திர நாள் விழா தியாகராய நகரில், அகோபில மடம் பாடசாலையில் நடைபெற்றது. பெடரல் கோர்ட் முன்னாள் நீதிபதி எஸ். வரதாச்சாரி விழாவிற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் கூறியதாவது:

"வைதீக சிரத்தை உள்ளவர்கள் லௌகிகர்களாகவும் இருக்கலாம்; லௌகிகர்கள் வைதீகத்துடனும் இருக்கலாம் என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. வைதீகத்துறையில் இறங்கி, அதற்காக சமஸ்கிருதம் மட்டுமே படித்தால் பிழைப்புக்கு வழியிராது போய்விடுமோ என்று அஞ்சி, அக்காலத்திலேயே காலஞ்சென்ற வி. கிருஷ்ணசாமி அய்யர், பி. எஸ். சிவசாமி அய்யர் போன்றவர்கள் பெரு முயற்சி எடுத்துக்கொண்டு, 'சிரோமணி பட்டம்' ஏற்படுத்தி, இவர்களுக்குப் பள்ளிக்கூடங்களில் ஆசிரியர் பதவி கிடைக்க ஒரு வகை செய்தனர்; ஆனால் பள்ளிக் கூடங்களும், ஆசிரியர்களும் இருந்து, மாணவர்கள் இல்லாவிடில் ஒன்றும் செய்வதற்கில்லை! ஆகையால் பலவற்றையும் சீர்தூக்கிப் பார்த்து ஆங்கிலப் படிப்புக்கும், சமஸ்கிருதப் படிப்புக்கும், ஒருவித தொடர்பு உண்டுபண்ணி வாழ்க்கைக்கு வழியுடன், வாழ்விற்கும் வழி செய்து, அழகிய சிங்கர், திட்டமிட்டு, இந்தப் பாடசாலையையும், இதுபோன்ற பாடசாலைகளை வேறு இடங்களிலும் ஏற்பாடு செய்திருக்கிறார்" என்றார்.

"150 ஆண்டுகளாக ஆங்கிலம் நம்மிடம் இருந்தும், எவ்வளவு தூரம் ஆங்கிலத்தில் உங்களால் பேச முடிகிறது? கருத்துக்களை உடன் புரிந்துகொள்ள முடியவில்லை. எடுத்த எடுப்பிலேயே 'ஹா, ஹா' 'ஹு ஹு' 'ஹோ, ஹோ' என்று அதிகமாயுள்ள ஒலியினையுடைய மொழியினை நாட்டு மொழியாக்கினால் எவ்வாறு ஏற்றுக் கொள்வது? ஏற்றுக்கொள்ளத்தான் முடியுமா?"

இராணுவத்தில் - ஆள் குறைப்பு

2,30,000 பேர் விலக்கப்படுவர்?

நியூயார்க், டிச. 8—

அடுத்த ஜூலையிலிருந்து ஆரம்பமாகும் நிதி ஆண்டில், இராணுவம், கடற்படை, விமானப்படை இவைகளில் 10 சதவிகிதம் ஆட்களைக் குறைத்துக் கொள்ள முடியுமா என்று கேட்கப்பட்டுள்ளது. இந்த ஆள்குறைப்பு திட்டம் அமுல் செய்யப்பட்டால் 2,30,000 பேர் விலக்கப்படுவர்.

இராணுவம், 1,42,000 பேர்களையும் கடற்படை 75,000 பேர்களையும், மரீன்கள் 23,000 பேர்களையும் விடுத்துவிடலாம் என பாதுகாப்பு இலாகா கருதுகிறது. விமானப்படையில் 10,000 பேர்களுக்கு மேல் அதிகபட்சம் ஆட்கள் வேண்டாம் என்பது இந்த இலாகாவின் எண்ணம்.

இந்த ஆட்குறைப்பால், ஆண்டில் 100,00,00,000 டாலர்கள் மிச்சப்படும் இராணுவ அதிகாரிகள். இம்மாதிரி ஆள் குறைப்பால் அமெரிக்காவின் பாதுகாப்பு பலவீனப்படும் என்கிற கருத்தை வெளியிட்டால், ஆள் குறைப்பு யோசனை கைவிடப்படும்.

உலகத்திலேயே அதிசயமான எஞ்சினீயரிங் வேலை

லண்டன், டிச. 9—

கானடா தேசத்திலிருக்கும் செயின்ட் லாரென்ஸ் நதியில், 2,600 மைல்கள் வரை கப்பல்கள் போகக் கூடியவாறு 27 அடி ஆழமாக்கி நதியைத் 'தூர்' எடுக்கப் போகிறார்கள். இதற்கு 20 கோடி பவுன் செலவாகுமாம். இந்த வேலை முடிந்ததும் சமுத்திரத்தில் போகும் பெரிய கப்பல்களும் நதியில் போக முடியுமாம்.

சென்னை சிறைகளில் 22000 கைதிகள்

5,000 பேர் மதுவிலக்கு குற்றங்களைச் செய்தவர்கள்!

சென்னை, டிச. 8—

சென்னை மாகிலச் சிறைகளில் சென்ற நவம்பர் கடைசி வாரத்தில் 22,000 கைதிகள் இருந்திருக்கின்றனர். இவர்களில் மதுவிலக்கு குற்றங்களைச் செய்ததற்காக சிறைத் தண்டனை பெற்றவர்கள் 5,000 பேர்.

கைதிகளுக்கு தொழில் பயிற்சி

சென்னை, டிச. 8—

சென்னை ராஜ்ய கைதிகளுக்கு 20 வகையான கைத்தொழில்கள் கற்றுத் தரப்படுகின்றன. இவைகளில் சில தச்சு வேலை, கருமார வேலை, எண்ணெய் ஆட்டல், ஜமக்காளம் நெய்தல், நெசவு, தோட்டத் தொழில் செய்தல் சர்க்கார் நூற்றல் முதலியவை யாரும் இந்த வேலைகளைச் செய்வதற்காக கூலி கொடுக்கப்படுகிறது.

விதிவிலக்கு கிடையாது!

சென்னை, டிச. 8—

முன்னாள் சமஸ்தானாதிபதிகள், தொழிலில் லாபக் கணக்கிலோ அல்லது கோடிக் கணக்கிலோ முதலீடு செய்து, அதனால் வருமானம் பெறுகிற பட்சத்தில், இந்தியாவின் சாதாரண மக்களைப் போலவே அவர்களும் வருமான வரி, சூப்பர் வரிகளைக் கட்டவேண்டும் என்று இந்திய சர்க்கார் முடிவு செய்துள்ளது.

சென்னை சமாதானக் குழு

பிரிட்டிஷ் சமாதான தலைவர் டாக்டர் ஜோன்ஸ் இம்மாதம் 12-ம் தேதி சென்னைக்கு விஜயம் செய்கிறார். அவருக்கு மகத்தான வரவேற்பு அளிக்க, அன்று காலை 6-50 மணிக்கு சென்ட்ரல் ரயில்வே நிலையத்திற்கு பொது மக்கள் அனைவரும் திரளாக வரவேண்டுமென்றும், 13-ம் தேதி நடைபெறவிருக்கும் அந்நிய நாட்டு எதிர்ப்பு மாநாட்டில் டாக்டர் ஜோன்ஸ் கலந்து கொள்வார் என்றும், குழுவின் செயலாளர் அறிவிக்கிறார்.

மட்டிமேடு - ஆதிரங்கம் தி. மு. கழகம்

6—12—53ல், நடைபெற்ற செயற்குழு கூட்டத்தில், வருகிற மாதத் திங்களில், தோழர் கருணாநிதிக்கு ஓர் பாராட்டுக் கூட்டம் நடத்துவதென்று தீர்மானிக்கப்பட்டது.

திருமணம்

கோவில்பட்டி எ. சி. அமிர்தலிங்கம் அவர்களின் இளைய புதல்விக்கும் தி. மு. கழகத் தோழர் பெரியசாமிக்கும் 11—11—53 அன்று வாழ்க்கை ஒப்பந்தம் ஈ. வே. அ. வள்ளிமுத்து அவர்கள் தலைமையில் நடைபெற்றது. 'நம்நாடு' வளர்ச்சிக்காக ரூ 2 அன்பளிக்கப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றியுடையது—பொறுப்பாளர்.

திருச்சி தோழர்கள் விடுதலை

திருச்சி, டிச. 10—

சிறை புகுந்த திருச்சி நகர தி. மு. கழகத் தலைவர் செயலாளர் அருணகிரி, முதலான 7 பேர் 8—12—53 அன்று விடுதலை அடைந்தனர்.

* * *

மேற்படி வழக்கில் சம்பந்தப்பட்ட தோழர்கள்: டி. எம் ரத்தினம், கபலை ஆகியோருக்கு 40 அபராதம் அல்லது ஒரு வார சிறை தண்டனை என 9—12—53 அன்று தீர்ப்பு கூறப்பட்டது.

தோழர்கள் அபராதம் கட்ட மறுத்து சிறை புகுந்தனர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. செழியன், எம். ஏ., அவர்களால், அறிஞர் அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, குளக்கரை நாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இ. எஸ். சம்பத்துரை, எம். ஏ.